

கோவை கொடீசியா அருகில் உள்ள ஜே.ஆர்.ஹாலில் நடைபெற்ற திமுக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் அமைச்சர் சு.முத்துசாமி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்பி., ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி ஈஸ்வரசாமி எம்பி., ஆகியோரும் பேசினர். இதில் மு.வாசிம்ராஜா வரவேற்புரையில், மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.எம்.சஞ்சய்குமார் தலைமையில், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தொ.மு.தியாகராஜன், தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ந.ஜெகதீஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்பனா செந்தில், எஸ்எம்பி முருகன், எஸ்.ஆர்.பார்த்திபன், கார்த்திக், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, கோபால் ராம், மனோகரன், கௌதமன், ஏர்போர்ட் ராஜேந்திரன், இரா.வெற்றிச்செல்வன், அசோக் ஆறுக்குட்டி, துரை. செந்தமிழ்செல்வன், ஏ.எஸ்.நடராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், காவிரி ஆற்றில் நாட்டின மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, 6 மீனவர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பில் குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய இருசக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் உமா கலைச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### 45வது ‘செஸ் ஒலிம்பியாட்’டில் இந்தியா தங்கம் வென்று சாதனை!

# வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டுகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.24-

45-ஆவது ‘செஸ் ஒலிம்பியாட்’டில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் இந்தியா தங்கம் வென்றுள்ளதையடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், “வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு எனது பாராட்டுகள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**இந்தியா தொடர்ந்து உயர்கிறது, ஒளிர்கிறது!**

**சென்னையில் நாம் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டிய செஸ் ஒலிம்பியாடைத் தொடர்ந்து, தற்போதைய 45ஆவது செஸ் ஒலிம்பியாட், புதாபெஸ்த் 2024இல் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என இரண்டிலும் தங்கம் வெல்லும் அளவுக்கு இந்திய அணி பயணித்துள்ளது!**

**தங்கள் எல்லைகளைத் தொடர்ந்து அகலப்படுத்தி, இடைவிடா அர்ப்பணிப்புடன் நமது செஸ் சாம்பியன்கள் உலக அரங்கில் நமது நாட்டுக்குப் பெருமை தேடித் தருவதைக் காண்பது நெஞ்சுக்கு இதமளிக்கிறது.**

**வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு எனது பாராட்டுகள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கா.அமுதரசன் – ரா.தமிழரசன் பங்கேற்பு!

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

### மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை.

கள்ளக்குறிச்சி, செப்.24-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் இன்று (24.09.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் (ராஜா தியேட்டர் பின்புறம்) எனது (தா.உதயசூரியன் எம்.எல்.ஏ.,) தலைமையில் நடைபெறுகிறது.



இதில் மாநில மாணவரணி இணைச் செயலாளர் கா.அமுதரசன், கழக மாநில மாணவரணி துணைச் செயலாளர் சேலம் ரா.தமிழரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நேர்காணல் நிகழ்ச்சியில் கல்லூரி பயிலும் மாணவ மாணவிகள் அரசு மற்றும் தனியார் கலை கல்லூரிகள்,சட்டக்கல்லூரி, பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. உள்ளிட்ட அனைத்து வகை கல்லூரி மாணவ -மாணவியர் மற்றும் கல்லூரி படிப்பை முடித்த பட்டதாரிகள் மட்டுமே நேர்காணலில் கலந்து கொள்வதற்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் அந்தந்த ஒன்றிய,நகர,பேரூர் கழகச் செயலாளர்களிடம் நேர்காணல் நடைபெறும் நாளன்று கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு.

நேர்காணலில் கலந்து கொள்பவர்கள் கொண்டு வர வேண்டிய ஆவண விபரங்கள்.

நேர்காணலில் கலந்து கொள்பவர்களுடைய பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 2 காப்பி.

மாற்றுச் சான்றிதழ்.

பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான அடையாள அட்டை.

ஆதார் அட்டை ஆகியவற்றின் ஜெராக்ஸ் நகல் ஆகியவற்றை கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி நேர்காணல் கூட்டம் ஈரோடு மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியன் தலைமையில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சரளை ராசு (ஏ) கோபால் முன்னிலையில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் துணைச் செயலாளர்கள் க..பொன்ராஜ், வி.ஜி.கோகுல், வீரமணிஜெயக்குமார் நேர்காணல் செய்தனர். நேர்காணலில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஈரோடு இளைய கோபால், பவானி கண்ணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்பி சதீஷ், பி.என்.எம்.கதிரவன், கே.எம்.ராஜா, சி.ஏ.கார்த்திகேயன், மெகராஜ் அஸ்கர், மாநகர அமைப்பாளர் என் ஸ்ரீதர், மாநகர துணை அமைப்பாளர்கள் ஆர்.நல்லசிவம் (ஏ) சிவா, எம்.மணிகண்டன், கு.தனராஜா, ப.சத்தியவதி, வழக்கறிஞர் விஜயகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் ராசாராவ் வீதியில் அமைந்துள்ள திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் வரவேற்புரையில் கழக மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், ஆனந்த், வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் (தெற்கு) மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் (வடக்கு) மாவட்ட அவைத் தலைவர் க.நடராசன், துணைச் செயலாளர், பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர், வழக்கறிஞர் எஸ்.குமார் உள்பட மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவையில் – மண்டல அளவிலான

# கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் கலந்துரையாடல் கூட்டம்!

### அமைச்சர் சு.முத்துசாமி – தயாநிதிமாறன் எம்.பி. பேட்டி!

கோவை, செப். 24-

கோவை கொடீசியா அருகில் உள்ள ஜே.ஆர். ஹாலில் நடைபெற்ற தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., தமிழ்நாடு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், ஈஸ்வரசாமி எம்.பி., தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல பொறுப்பாளர் மு.வாசிம் ராஜா, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் எம்.எம்.சஞ்சய்குமார், தொ.மு.தியாகராஜன், ந.ஜெகதீஸ்வரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கல்பனா செந்தில், அசோக் ஆறுக்குட்டி, பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஆர்.பார்த்திபன், கார்த்திக், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, கோபால் ராம், மனோகரன், கௌதமன், மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், பீளமேடு பகுதி 1 செயலாளர் செந்தமிழ்ச்செல்வன், 24 வது வட்டக் கழகச் செயலாளர் ஏ.எஸ்.நடராஜ், கழக நிர்வாகிகள், விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தயாநிதி மாறன் எம்.பி., கடந்த 10 ஆண்டுகளாக மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்போ அல்லது ஜாதி வாரி கணக்கெடுப்போ நடத்தவில்லை.ஆனால் பல நாடுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திவிட்டார்கள். ஆனாலும் அதையெல்லாம் விட்டுவிட்டு ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்த திட்டமிடுவதாகவும், இப்போது தான் காஷ்மீருக்கே தேர்தல் நடத்துகிறார்கள்.

இதன் மூலம் பா.ஜ.க. அரசு ஏதோ சதி செய்கிறதோ என்பதாக தான் தோன்றுகிறது என அவர் குற்றம் சாட்டினார். குறிப்பாக ஒரே நாடு ஒரே தேர்தலில் பல குழப்பங்கள் உள்ளதாகவும் இதில் எழும் சந்தேகங்கள் குறித்து கேள்வி கேட்டால் பதில் ஏதுமில்லை எனவும் அவர் தெரிவித்தார். மக்கள் தங்களது பிரச்சனையை சொன்னால் பா.ஜ.க. அரசு அதை திசை திருப்புவதாகவும் உதாரணம் அன்னபூர்ணா விவகாரம் தான் என தெரிவித்த அவர்,

அன்னபூர்ணா விவகாரத்தில் கோவை மக்களை மிரட்டுகிறார்களோ என்று தோன்றுவதாகவும், நிர்மலா சீத்தாராமன் வட மாநிலத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் ஒருவர் ஹிந்தி மொழி மூலம் பேசி கேள்வி கேட்டால் அவர்களுக்கு மரியாதை கொடுக்கிறார்கள்.ஆனால் இங்கு ஒருவர் தமிழில் பேசி கேள்வி கேட்டால் மரியாதை கொடுப்பதில்லை. எனவும் அவர் குற்றம்சாட்டினார். குறிப்பாக மக்கள் பிரச்சனை பேசினால் நான் வெங்காயம் சாப்பிடவில்லை என்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார். மெடிஷன் படிப்பது என்றால் சம்ஸ்கிருதம் தெரிய வேண்டும் என்கிறார்கள்.

நீட் தேர்வில் நடந்த முறைகேட்டில் அந்ததுறை அமைச்சர் ராஜினாமா செய்தாரா ? என கேள்வி எழுப்பிய அவர் ‘நீட்’ தேர்வில் பல முறைகேடு நடப்பதாகவும் தமிழ்நாட்டில் உள்ள மக்களை அண்ணா, கலைஞர், பெரியார் ஆகியோர் படிக்க வைத்துவிட்டார்கள். அதனால் தான் இவ்வளவு கேள்வி கேட்கிறார்கள் எனவும் தயாநிதி மாறன் தெரிவித்தார். மோடி இந்தியாவில் இருப்பதே குறைவு. வெளிநாடுகளில் மட்டும் இருக்கிறார் என்று மோடியின் வெளிநாட்டு பயணம் குறித்த கேள்விக்கு பதிலளித்த தயாநிதி மாறன், மதத்தை வைத்தே தொடர்ந்து பா.ஜ.க. அரசியல் செய்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார். அ.தி.மு.க. மிக கஷ்டமான காலத்தில் உள்ளதாகவும் முதுகு தண்டு வளைந்துள்ளதால் தான் அவர்களால் நிமிர முடியவில்லை எனவும்,

கட்சியை பா.ஜ.க.விடமும் அடிமையாக்க வைத்திருந்ததே எடப்பாடி பழனிச்சாமி செய்த மிகப்பெரிய தவறு எனவும் தயாநிதி மாறன் விமர்சனம் செய்தார். அதிமுகவின் வைத்தியலிங்கம் மற்றும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மீது வழக்கு பதிவு செய்தது குறித்து ஒ.பி.எஸ். கூறிய கருத்துக்கு பதிலளித்த தயாநிதி மாறன், ஒன்றாக ஆட்சி செய்யும் போது பணம் வாங்கிய போது தெரியாதா? எனவும் அவர் தெரிவித்தார்.

### பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் மேற்கு ஒன்றியம் –

# டி.களத்தூரில் கழக உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் -- எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர் செப்.24-

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியத்தில் உள்ள கிளை கழகங்களில் புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சியை டி.களத்தூர் கிராமத்தில் நேற்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.


நிகழ்ச்சிக்கு, ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமை வகித்தார். மாவட்ட பொறுப்பாளர் ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஸ் குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் களத்தூர். வெ.கார்மேகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நத்தக்காடு, தேனூர், தொட்டியப்பட்டி, கண்ணாப்பாடி, மாவிலங்கை, நாரணமங்கலம், விஜயகோபாலபுரம் உள்ளிட்ட கிராமங்களில் கழகத்தில் புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அந்தந்த கிராமத்தைச் சேர்ந்த கிளைக்கழக செயலாளர்கள் , பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. பழனிச்சாமி

**செப்டம்பர் 24 (2000)**



**திருவொற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.**

**‘கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு’ என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**